[1972 ஆகஸ்ட் 19

தொழிலாளர்கள் 'சிலிகோசிஸ்' என்னும் பிணியினால் பாதிக்கப்படுதல்

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) சேலம், அரசினர் படிகக் கற்கள் வெட்டும் தொழிற்சாலை தொழிலாளர்கள் 'சிலிகோசிஸ்' என்னும் பிணியினால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், தொழில் சார்ந்த இந்த உடற்கேட்டைத் தவிர்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இது போல ஒரு புகார் இருந்தது. இப்போது இத் தொழிற்சாலை மூடப்பட்டு விட்டது.

Marxist-Extremist Prisoners (Naxalites)

* 102. *Q.*—THIRU P. T. MUTHU (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether 600 (six hundred) Marxist-Extremist Prisoners (Naxalites) who were in West Bengal are accommodated in Cuddalore Central Jail, Tamil Nadu;

(*b*) if so, the State which will be bearing the expenditure on them; and

(*c*) whether others who were in that jail were transferred to some other jail for accommodating them?

தீ. கம்யூனிஸ்டு (நக்ஸல்பாரிகள்) கைதிகள்

திரு. பி. டி. முத்து (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்---

(அ) மேற்கு வங்காளத்தில் இருந்த 600 (அறுநூறு) தீ. கம்யூனிஸ்டு (நக்ஸல்பாரிகள்) கைதிகள் தமிழ் நாட்டு கடலூர் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு ஆகும் செலவை எந்த மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்?

(உ) அங்குள்ள மற்றக் கைதிகள் இவர்களுக்காக வேறு ஜெயிலுக்கு மாற்றப்பட்டுள்ளார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) உள்நாட்டு பாதுகாவல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள 691 காப்பு சிறையாளர் மேற்கு வங்காள சிறைகளிலிருந்து கடலூர் மத்திய சிறைக்கு 3—1—72-ல் மாற்றப்பட்டனர்.

(இ) மேற்கு வங்காள மாநில அரசு மேற்படி கைதிகளுக்கான செலவை ஏற்றுக் கொள்ளும்.

(உ) ஆம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : கேள்வி கேட்ட பல மெம்பர்கள் வரவில்லை. ஒரே ஒரு உறுப்பினர், திரு. ஆறுமுகசாமி இருக்கிறார்.

State Industries Promotion Corporation (*SIPCOT*)

* 103. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any evaluation of the industrial potential is being made by the State Industries Promotion Corporation (Sipcot) in this State; and

(*b*) if so, the details thereof?

மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்தினல் தொழில் வளம் குறித்து மதிப்பீடு ஏதாவது செய்யப் பட்டு வருகிறதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?